TNTAM/25/A3587

தினசுடர்

DINA SUDER TAMIL DAILY
காலை நாளிதழ்

DINA SUDER காலை நாளிதழ் TAMIL DAILY

* Vol: 01 * Issue: 355 * 26.10.2026 * Monday * Page: 4 * Price: Rs.5 * Kanniyakumari *

5 தொகுதிகளுக்கு விரைவில் இடைத்தேர்தல்

தயாராக இருக்க திமுக நிர்வாகிகளுக்கு ஸ்டாலின் உத்தரவு

சென்னை, அக்.26: 'தமிழகத்தில் காலியாகவுள்ள 5 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அறிவிப்பு விரைவில் வெளியாக உள்ள நிலையில், தேர்தலை எதிர் கொள்ள நிர்வாகிகள் தயாராக இருக்க வேண்டும்' என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் மதுராந்தகம், தாராபுரம், கரூர், பெருந்துறை, அம்பாசமுத்திரம், விராலிமலை, திருச்சி கிழக்கு ஆகிய தொகுதிகள் காலியாக இருந்த நிலையில், முதற்கட்டமாக தாராபுரம், மதுராந்தகம் தொகுதிகளில் அக்.6-ம் தேதி இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. இரண்டிலும் தவெக வெற்றி பெற்றது.

எஞ்சியுள்ள 5 தொகுதிகளிலும் இடைத்தேர்தல் நடத்துவதில் நீதிமன்ற வழக்குகள் காரணமாக சட்ட சிக்கல்கள் எழுந்தன. இந்த விவகாரத்தை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், 5 தொகுதிகளிலும் இடைத்தேர்தல் அறிவிப்பை வெளியிடுவதற்கு தற்காலிக தடை விதித்தது.

இதனால், தேர்தல் ஆணையத்தால் உடனடியாக இடைத்தேர்தல் அறிவிப்பை வெளியிட முடியாத நிலை



ஏற்பட்டது.

இந்நிலையில், இடைத்தேர்தல் அறிவிப்பு எப்போது வேண்டுமானாலும் வெளியாகலாம் என்பதால், 5 தொகுதிகளிலும் தேர்தல் பணிகளைத் தொடங்குமாறு திமுக நிர்வாகிகளுக்கு, மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தி உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த வகையில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று கரூர், பெருந்துறை, அம்பாசமுத்திரம், விராலிமலை, திருச்சி கிழக்கு ஆகிய 5 தொகுதிகளையும் சேர்ந்த கட்சி நிர்வாகிகளுடன் மு.க.ஸ்டாலின் திடீர் ஆலோசனை நடத்தினார். அப்போது, தொகுதிகளின் அரசியல் சூழல், கட்சியின் அமைப்பு ரீதியான தயார் நிலை, தேர்தல் பணிகளைத் திட்டமிடுதல், வேட்பாளர் தேர்வு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நிர்வாகிகளிடம் ஸ்டாலின் பேசும்போது, "5 தொகுதிகளிலும் இடைத்தேர்தல் அறிவிப்பு எந்த நேரத்திலும் வெளியாகலாம். எனவே, அதற்கான பணிகளை இப்போதே தொடங்கவேண்டும். தொகுதிகளில் மக்களிடம் நன்கு அறிமுகமானவர்களை அடையாளம் கண்டு, அவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலை கட்சித் தலைமைக்கு அனுப்ப வேண்டும். வேட்பாளர்களை கட்சி தலைமை முடிவு செய்யும். கடந்த இடைத்தேர்தல்களிலும் தேர்தல் வெற்றியைத் தவறவிட்டுள்ளோம். எனவே, இந்த முறை வெற்றி பெற்றே ஆகவேண்டும்.

தமிழகத்தில் தினமும் கொலை, குற்றச் சம்பவங்கள் நிகழ்கின்றன. விலைவாசியும் உயர்ந்துள்ளது. இதனால் மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். மக்களைச் சரியான முறையில் அணுகி, திமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட மக்கள் நலத் திட்டங்களை எடுத்துரைத்து வாக்குகளைப் பெற வேண்டும்" என்று அறிவுறுத்தியதாகக் கூறப்படுகிறது.

சமையல் கலையை மக்களிடம் கொண்டு சேர்த்தவர்

செஃப் தாமுவுக்கு முதல்வர் விஜய் புகழஞ்சலி

சென்னை, அக்.26: 'தனது சமையல் திறமையாலும், தனித்துவமான அணுகுமுறையாலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வாயிலாகச் சமையல் கலையை மக்களிடம் கொண்டு சேர்த்தவர் செஃப் தாமு' என்று தமிழக முதல்வர் விஜய் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.



பிரபல சமையல் கலைஞர் செஃப் தாமு உடல் நலக்குறைவு காரணமாக இன்று (அக்.25) காலமானார். அவருக்கு வயது 72.

உடல்நலபாதிப்பால் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், இன்று காலையில் உயிரிழந்தார்.

அவரது மறைவுக்கு சமையல் கலைஞர்கள், திரையுலகினர் மற்றும் ரசிகர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் தமிழக முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள இரங்கல் குறிப்பில், "பிரபல சமையல் கலைஞர் செஃப் தாமு என்று அழைக்கப்படும் கே.தாமோதரனின் மறைவு மிகுந்த வேதனையளிக்கிறது. தனது சமையல் நிறமையாலும், தனித்துவமான அணுகுமுறையாலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வாயிலாகச் சமையல் கலையை மக்களிடம் கொண்டு சேர்த்தவர். 2010 ஆம் ஆண்டில் தனிநபரின் மிக நீண்ட சமையல் மாரத்தான் என்ற கின்னஸ் உலக சாதனையைப் படைத்ததோடு, பத்மஸ்ரீ விருதும் பெற்ற பெருமைக்குரியவர். அவரது மறைவு சமையல் கலைத்துறைக்குப் பேரிழப்பாகும்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், சமையல் கலையை நேசிக்கும் ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

அமமுக பொதுச் செயலாளர் டி.டி.வி தினகரன் வெளியிட்ட இரங்கல் குறிப்பில், "புகழ்பெற்ற சமையல் கலை நிபுணரும், அக்கலையின் பெருமையை உலகறியச் செய்து இன்னல் சாதனை படைத்தவருமான பத்மஸ்ரீ தாமு உடல்நலக் குறைவால் இயற்கை எய்திய செய்தி மிகுந்த வேதனையையும் வருத்தத்தையும் அளிக்கிறது. சமையலை ஒரு தொழிலாகக் கருதாமல், அதனை ஓர் உன்னதக் கலையாக உயர்த்திக் காட்டிய தாமுவை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் சக சமையல் கலை நிபுணர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆன்மா இறைவனின் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

கட்டணமில்லா அரிசியை பாலிஷ் போட்டு ரூ.30க்கு விற்று கொள்ளை அடிப்பதுதான் மாற்றமா? - உதயநிதி சாடல்



சென்னை, அக்.26: 'இலவச ரேஷன் அரிசியை பாலிஷ் செய்து ரூ.30-க்கு விற்பதாக உதயநிதி ஸ்டாலின் குற்றச்சாட்டு. அரிசியின் தரம், கொள்முதல் டெண்டர் குறித்து கேள்வி.

ரேஷன் கடைகளில் வழங்கப்படும் கட்டணமில்லா அரிசியை பாலிஷ் போட்டு சன்னரகப் பொன்னி அரிசியாக த.வெ.க. அரசு விற்பதாக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் குற்றம்சாட்டியுள்ளார்.

உதயநிதி ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில், "மக்களுக்கான கட்டணமில்லா அரிசியை பாலிஷ் போட்டு 30 ரூபாய்க்கு விற்றுக் கொள்ளை அடிப்பதுதான் Dummy CM சொன்ன மாற்றமா?

அரிசி விலையேற்றத்துக்கான தீர்வாக, கூட்டுறவு அங்காடிகளில் சன்னரகப் பொன்னி அரிசியை ரூ.30-க்கு வாங்கலாம் என்று இந்த அரசு அறிவித்தது.

அதை நம்பி ரேஷன் கடைகளுக்குப் போனால், வழக்கமாக வழங்கப்படும் கட்டணமில்லா அரிசியை பாலிஷ் போட்டு, சன்னரகப் பொன்னி அரிசி என்று விற்கப்படுவதாக தமிழ்நாடெங்கும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். பல இடங்களில் அரிசியைத் திருப்பிக்கொடுத்தும் வருகின்றனர்.

கம்பத்தில் பாலிஷ் செய்யப்பட்ட அரிசி வழங்கப்பட்டதால், த.வெ.க. எம்.எல்.ஏ.வை முற்றுகையிட்டு பொதுமக்கள் கேள்வி எழுப்பியபோது, கரூர் பாணியில் ஒட்டமெடுத்திருக்கிறார் அந்த எம்.எல்.ஏ.




▶ நேபாளத்தின் நுவாகோட் மாவட்டத்தில் உள்ள திரிசூலியில், திடீர் வெள்ளப்பெருக்கிற்குப் பிறகு சேற்றால் மூடப்பட்ட சொத்துகளின் வான்வழித் தோற்றம்.

தமிழ்நாட்டில் 2 கோடியே 28 லட்சம் குடும்ப அட்டைகள் இருக்கும்போது, வெறும் 250 இடங்களில் அதுவும் குடும்பத்துக்குத் தலா 5 கிலோ மட்டும் என, சன்னரகப் பொன்னி என்ற பெயரில் பாலிஷ் செய்யப்பட்ட அரிசி வழங்கப்படுவதாகத் தொடர்ந்து புகார்கள் வருகின்றன.

2007-ல் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்தபோது, அன்றைய முதல்வராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சிறப்புப் பொதுவிநியோகத் திட்டத்தை அறிவித்து, வெளிப்படையான முறையில் டெண்டர் விட்டு, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு உள்ளிட்ட பொருட்களை மானிய விலையில் மக்களுக்கு வழங்கினார்கள்.

ஆனால், இந்தக் கோமாளி அரசு, சன்னரகப் பொன்னி அரிசியைக் கொள்முதல் செய்வதற்கு எப்போது டெண்டர் விட்டது? டெண்டர் எடுத்த நிறுவனங்கள் எவை?

என்ன விலைக்கு அவர்கள் அரசுக்கு பொன்னி அரிசியை வழங்கினார்கள்? த.வெ.க. அரசு பொதுமக்களுக்குஎவ்வளவுமானியவிலையில்அரிசியை வழங்குகிறது? இதுகுறித்து பாலிஷ் எதுவும் போடாமல் வெளிப்படைத்தன்மையுடன் இந்த ஆட்சியாளர்கள் பதிலளிக்க வேண்டும்" என்று பதிவிட்டுள்ளார்.





கன்னியாகுமரி மாவட்ட சிறப்பு கண்காண்காணிப்பு அலுவலர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மு.பிரதாப், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (25.10.2026) பேச்சிப்பாறை அணையினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.